நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம்

உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட முகாமைத்துவம்

- *NEOS இணைய மற்றும் கைபேசிச் செயலி*

Classification: Public

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – NEOS இணைய மற்றும் கைபேசிச் செயலி

விளைபொருள் / சேவை	எவையேனும் ஊக்கத் தொகைகள் மற்றும் மேம்பாடுகள் உட்பட நிதிசார் மற்றும் வேறு நன்மைகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, முக்கிய ஆபத்துக்கள்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
NEOS இணைய மற்றும் கைபேசிச் செயலி	**முக்கிய அம்சங்கள்** 1. NEOSPay • NEOS செயலியினூடாக கொடுப்பனவுகளைச் செய்ய முடியும் . • "QR இனை ஸ்கேன் செய்யுங்கள், பதிகை புகுங்கள் மற்றும் பணம் செலுத்துங்கள்" என்ற 3 எளிய படிகளில் லங்கா QR உடன் QR இனை ஸ்கேன் செய்வதினூடாக எந்த வணிகருக்கும் கொடுப்பனவுகளைச் செய்ய முடியும். 2. JustPay • ஏனைய வங்கிக் கணக்குகள் JustPay ஊடாக NEOS செயலிக்கு சேர்க்கப்படமுடியும் 3. கணக்குகள் /நிலையான வைப்புக்கள்/இஸ்லாமிய வங்கியியல் /கடன் அட்டைகள் /கடன்கள்/ குத்தகைக்கு விடுதல் சேவைகள் ஆகியவை தன்னியக்கமாக NDB NEOS செயலிக்கு இணைக்கப்படும். 4. முக அங்கீகாரம் மற்றும் விரல் அடையாள ID ஊடாக அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் 5. நிகழ்நேர நிதிப் பரிமாற்றம் மற்றும் கடன் அட்டைக் கொடுப்பனவு வசதி • NDB NEOS ஆனது, ஏனைய வங்கி நிதிப் பரிமாற்றங்கள் மற்றும் கடன் அட்டைக் கொடுப்பனவுகளுக்கு நிகழ்நேர நிதிப் பரிமாற்றத் திறனுடன் (CEFTS) இயலுமாக்கப்படுகின்றது **6.** உமது NDB அட்டைகளின் மீது கட்டுப்பாட்டை வைத்திருங்கள் • NDB NEOS ஆனது, உமது கடன் அல்லது டெபிட் அட்டையை சுவிட்ச் ஒன் / ஓ.ப் செய்வதற்கான திறனை உமக்கு வழங்கும். • காணாமல் போன அட்டை பற்றி அறிவிக்கவும்	NDB வங்கிக் கூட்டாண்மையின் இணையத்தளத்தில் 'பதிவிறக்கங்கள்' என்ற பிரிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட 'காப்பு வரி' தாளைப் பார்வையிடவும்.	1. இணையவழி வங்கிச் சேவைக்கு கைபேசிச் சாதனத்தினூடாக அல்லது இணைய உலாவியினூடாக பதிவுசெய்தல். 2. கைபேசிச் செயலிக்கான பதிவுகள் பின்வருமாறு: • நடைமுறை/சேமிப்புக் கணக்கு • கடன்/டெபிட் அட்டை • வேறு ஏதேனும் வங்கிக் கணக்கு **முக்கிய ஆபத்துக்கள்** 1. சாதனம் அல்லது SIM அட்டை காணாமல் போனால் அல்லது திருடப்பட்டால், PIN குறியீடுகள், SMS மூலமான விழிப்பூட்டல்கள் போன்ற வாடிக்கையாளரின் வங்கித் தகவல்களைப் பாதிக்கலாம் என்பதுடன் வாடிக்கையாளரை மோசடி ஆபத்துக்களுக்கு இலக்காக்கலாம். 2. SIM அட்டை தவறான கைகளுக்குச் செல்வதானது, வாடிக்கையாளரைப் போல் ஆள்மாறாட்டஞ் செய்யவும் தொடர்புகள்,செய்திகள், மற்றும் வேறு கணக்குகள் போன்ற அவரது தனிப்பட்ட தரவுகளை அணுகவும் இயலச்செய்யலாம். 3. வாடிக்கையாளர் தனது தொடர்புத் தகவலிலான எவையேனும் மாற்றங்களை வங்கிக்கு உடனடியாக அறிவிக்காவிடின், கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிவிப்புக்கள், மோசடி தடுப்புச் செய்திகள் அல்லது ஒரு முறை மாத்திரமான கடவுச் சொற்கள் போன்ற SMS மூலமான விழிப்பூட்டல்களை வங்கியிலிருந்து பெறமுடியாமைக்கு இட்டுச் செல்லும். 4. கையடக்கத் தொலைபேசி அதிகாரமளிக்கப்படாத அணுகுகைக்கு இலக்காக்கப்படுதலானது உமது	• வாடிக்கையாளர், எவ்விதத்திலும் பயனுறுத்தப்படும் மொபைல் பேங்கிங்/இணையவழி வங்கித் தொழிலினூடாக செய்முறைப்படுத்தப்படும் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும்/ கோரிக்கைகளுக்கும் முழுமையான பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றார். • மொபைல் பேங்கிங் / இணையவழி வங்கித்தொழில் சேவைகளுக்கு பதிவுசெய்வதன் மீது, தன்னால் பேணப்படும் எல்லாக் கணக்குகளும் மொபைல் பேங்கிங் செயலி மற்றும்/அல்லது இணையவழி வங்கித்தொழில் சேவைக்கு தொடுக்கப்படும் என வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார். • வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கணக்கில் (கணக்குகளில்) வங்கி விதிப்பனவுகள் உட்பட போதிய நிதிகள் கிடைக்கக்கூடியதாகவிருந்தாலொழிய மொபைல் பேங்கிங் / இணையவழி வங்கித்தொழிலினூடாக கொடுக்கல்வாங்கல்களைப் பயனுறுத்துதல் ஆகாது. • எதிர்காலத் திகதிகளுக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இயைபான திகதி மற்றும் நேரத்தில் வாடிக்கையாளரின் கணக்கில் (கணக்குகளில்) போதிய நிதிகள் கிடைக்கக்கூடியதாகவிருந்தால் மட்டுமே பயனுறுத்தப்படும் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

	7. யாராவது ஒருவருக்குப் பணஞ் செலுத்துங்கள் • உமது தொடர்புப் பட்டியலில் உள்ள உமது நண்பர்களின் தொடர்பு இலக்கங்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு நிதிகளைப் பரிமாற்றுங்கள் • QR இனை ஸ்கேன் செய்து NDB இல் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பணஞ் செலுத்துங்கள் • QR இனை பதிவேற்றி பணஞ் செலுத்துங்கள் 8. எவையேனும் முற்செலுத்திய அல்லது பிற்செலுத்திய இணைப்புக்களுக்கு NDB NEOS ஊடாக மீள்நிரப்புங்கள் 9. உமது கணக்குகளினூடாக சிட்டைகளைச் செலுத்துங்கள் 10. பதிவின் போது உமது செல்லப்பெயரை வழங்கவும், அதன் பின்னர் NDB NEOS உங்களை அடையாளங்கண்டு கொள்ளும் 11. உள்பெட்டி விருப்பத்தெரிவுகள் • உமது வங்கியுடன் தொடர்ந்து இணைந்திருங்கள் அத்துடன் பின்வருவன போன்ற பாதுகாப்பான அறிவுறுத்தல்களை அனுப்புங்கள்: • கணக்கைப் பேணுதல் பற்றிய விசாரணைகள் • முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டல்கள் • கடன் அட்டை பற்றிய விசாரணைகள் • இலத்திரனியல் வங்கிக்கூற்றுப் பதிவுக் கோரிக்கைகள் • நிதிப்பரிமாற்றம் தொடர்பான விசாரணைகள் • குத்தகைக்கு விடுதல் கோரிக்கைகள் • ஏனைய விசாரணைகள் • SMS விழிப்பூட்டல்களின் பதிவுக் கோரிக்கைகள் • பயணத்திட்ட இற்றைப்படுத்தல் கோரிக்கைகள் 12. **அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள்** • NDB NEOS பயனர்கள், இப்போது அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவு அம்சத்தைப் பயன்படுத்தி அவர்களது சிட்டைக் கொடுப்பனவுகள் மற்றும் நிதிப் பரிமாற்றங்களை இலகுவாக		நிதிகளின் திருட்டு அல்லது மோசடிக்கு இட்டுச் செல்லலாம்.	• வாடிக்கையாளருக்கு கொடுப்பனவொன்றைச் செய்யும் போது, வாடிக்கையாளரின் முகவர் ஒருவராகவோ அல்லது எந்த மூன்றாம் திறத்தவருக்கு கொடுப்பனவு பணிக்கப்படுகின்றதோ அந்த மூன்றாம் திறத்தவரின் முகவராகவோ வங்கி செயலாற்றாது என வாடிக்கையாளர் உடன்படுகின்றார். • வாடிக்கையாளர், மொபைல் பேங்கிங் மற்றும்/அல்லது இணையவழி வங்கித்தொழிலினூடாக வாடிக்கையாளரினால் பயனுறுத்தப்படும் பயனர் செயற்பாடு மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகளைப் பேணுவதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். • சிவப்பு அறிவித்தல்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு மொபைல் பேங்கிங் பயன்படுத்தப்படமுடியாது எனவும் அவை வங்கியின் கிளையொன்றில் செய்யப்படுதல் வேண்டும் எனவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார். • மொபைல் பேங்கிங் மற்றும் /அல்லது இணையவழி வங்கித்தொழிலினூடாக செய்முறைப்படுத்தப்பட்ட எல்லாக்கொடுக்கல்வாங்கல்களினதும் வங்கியின் பதிவேடுகளையும் கூற்றுக்களையும் எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாகவும் வாடிக்கையாளர் மீது பிணிக்கப்படுவதாகவும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். • வாடிக்கையாளர் சாதனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் மொபைல்

	அட்டவணைப்படுத்த முடியும். (நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம்,காலாண்டுதோறும், வருடாந்தம்). 13. **எல்லா அடிப்படை விடயங்களும் உமது விரல் முனைகளில்** • உமது கணக்கு மீதியைச் சரிபார்க்கலாம் • உமது கொடுக்கல்வாங்கல் வரலாற்றைப் பார்வையிடலாம். • உமது கடன் அட்டை நிலுவையைச் சரிபார்க்கலாம் • உமது பட்டியலிடப்படாத கடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கடந்தகால கூற்றுக்களைப் பார்வையிடலாம். • உமது மிக அண்மையிலுள்ள வங்கிக் கிளை/ATM இனைக் கண்டறியலாம். • NDB இன் புதிய ஒப்பந்தங்கள் மற்றும் உரிமைச் சலுகைகளை சரிபார்க்கலாம் • Push அறிவித்தல் • உமது கொடுக்கல்வாங்கல் உச்சவரம்புகளை அமைத்துக்கொள்ளலாம்			பேங்கிங் மற்றும்/அல்லது இணையவழி வங்கித்தொழிலுக்கான தீங்கிழைக்கும் அச்சுறுத்தல்களுக்கெதிரான போதிய காப்பீடுகளுடன் முறையான தொழிற்பாட்டு ஒழுங்கில் சாதனத்தைப் பேணுதலும் வேண்டும், அத்துடன் வங்கிக்கு தீங்குவிளைவிக்கக்கூடிய முறையொன்றில் ஏதேனும் மென்பொருளைப் பயன்படுத்துதல் ஆகாது. • வாடிக்கையாளரின் பயனர் ID மற்றும்/அல்லது கடவுச் சொல் காணாமல்போகின்ற பட்சத்தில், வாடிக்கையாளர் வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். • பயனர் ID மற்றும் கடவுச் சொல்லை கண்டிப்பாக அந்தரங்கமாக வைத்திருப்பதற்கும் எந்த நேரத்திலும் எந்தச் சூழ்நிலைகளின் கீழும் எவரேனும் ஆள் அதனை அணுகுவதற்கு இடமளிக்காமல் இருப்பதற்கும் வாடிக்கையாளர் இத்தால் பொறுப்பேற்கின்றார். • ஏதேனும் இலத்திரனியல் ஊடகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான பயனர் ID கள் மற்றும் கடவுச் சொற்களைப் பயன்படுத்துவதன் விளைவுகளை வாடிக்கையாளர் முழுமையாக அறிகின்றார் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார் என்பதுடன் அத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கை வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய எவையேனும் சூழ்நிலைகளுக்கு வங்கி பொறுப்பாதலாகாது

உமது பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

எமது சேவைகளை எல்லா நேரங்களிலும் நீங்கள் திருப்திப்படும் வகையில் வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
உமது எதிர்பார்ப்புக்களை நாம் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றோம் என்பதை அறியவும் அவசியமாகின்றவிடத்து சீராக்கல்களைச் செய்வதற்கும் உமது பின்னூட்டம் எமக்கு உதவிபுரியும்.

உமது பின்னூட்டங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது:
உமது வங்கிக் கிளை முகாமையாளரை(வங்கிக் கிளை தொடர்பு விபரங்கள்) அல்லது உமது தொடர்பு முகாமையாளரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்
+94 (0) 11 2448888 என்ற இலக்கத்தினூடாக 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும்.
எமது மின்னஞ்சல் முகவரி: contact@ndbbank.com
முகாமையாளர், வாடிக்கையாளர் தொடர்பு முகாமை, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ, இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு எழுதவும்.

நாம் எவ்வாறு பதிலளிப்போம்:
முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல், வங்கியின் முறைப்பாட்டைக் கண்காணிக்கும் முறைமையில் பதிவுசெய்து அது பற்றிய விடயத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வோம். எம்மால் அவ்வாறு செய்ய இயலாமலிருக்கின்ற பட்சத்தில், மூன்று வேலை நாட்களினுள் தீர்வொன்றை நாம் உமக்கு வழங்குவோம். முறைப்பாட்டின் தன்மை காரணமாக, இக்காலப் பிரிவினுள் எம்மால் தீர்க்க முடியாவிடின், உத்தேச பதிலளிப்பு நேரமொன்றை நாம் உமக்குத் தெரிவிப்போம்.

நீங்கள் முன்மொழிந்த குற்றச்சாட்டு தொடர்பாக நாங்கள் அளித்த பதில் தொடர்பில் நீங்கள் முழுமையாக திருப்தியடையவில்லை என்றால்,
நீங்கள் இலங்கை நிதி ஒம்பியூட்ஸ்மன் அலுவலகத்தை அல்லது இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

திருமதி சந்தியானி விஜேசிங்க
நிதி ஒம்புட்ஸ்மன்
முகவரி: இல 01, பெதஸ்டா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு 05
நேரடி தொலைபேசி: +94 112595625 பொது தொலைபேசி /தொலைநகல்: +94 112595624
மின்னஞ்சல்: fosril@sltnet.lk வலைத்தளம்: financialombudsman.lk

இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம் (FCRD)
முகவரி: நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம்,
இல. 30, ஜாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
விசாரணைகளுக்கான துரித இலக்கம்: 1935 தொலைபேசி: +94 112477966
தொலைநகல்: +94 112477444 மின்னஞ்சல்: fcrd@cbsl.lk